## ஊடக வெளியீடு

## பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை – 2025

## பெறுபேறுகளை வெளியிடல்

2025 ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் 2025 செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

| | | |
|---|---|---|
| • விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | - | 308026 |
| • தோற்றியவர்களின் எண்ணிக்கை | - | 303670 |
| • வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றவர்களின் எண்ணிக்கை | - | 51969 |

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk எனும் பிரவேசிப்பதன் மூலம் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

- ❖ பரீட்சார்த்திகளின் சரியான சுட்டெண்ணை உள்ளடக்குவதன் மூலம் பெறுபேற்றைப் பார்வையிட முடியும் என்பதுடன், உரிய பரீட்சைப் பெறுபேற்று அட்டவணையை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.
- ❖ உதவிப்பணம் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 20,000 என்பதுடன் அதில் 250 விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- ❖ பரீட்சார்த்திகள் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகள், மாவட்டம், மொழிமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் உரிய வெட்டுப்புள்ளிகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.
- ❖ விசேட தேவைத் தொகுதியின் கீழ் புலமைப்பரிசிலுக்கு உரித்தான பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளுடன் அவர்கள் புலமைப்பரிசில் பெற்றுக் கொண்டமைக்கான விசேட குறிப்பொன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

02. அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் (User Name), கடவுச்சொல் (Password) ஆகியவற்றைப் பயன்படுத்தி 2025.09.04 ஆம் திகதி தொடக்கம் உரிய பாடசாலையின் பரீட்சைப் பெறுபேற்று அட்டவணையைத் தரவிறக்கம் செய்து கொள்வதற்காக https://onlineexams.gov.lk/eic இல் School Account Login இல் பிரவேசிக்கவும். பரீட்சார்த்திகளின் தனிப்பட்ட பெறுபேற்றுச் சான்றிதழ்கள் மேன்முறையீடுகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் பாடசாலைகளுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

03. மாகாண கல்விப் பணிப்பாளர்களும், வலயக் கல்விப் பணிப்பாளர்களும் தமக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர், கடவுச்சொல் ஆகியவற்றைப் பயன்படுத்தி தமது மாகாண/வலயத்திலுள்ள சகல பாடசாலைகளினதும் பெறுபேற்று அட்டவணைகளைத் தரவிறக்கம் செய்து கொள்வதற்காக https://onlineexams.gov.lk/onlineapps இல் Exam Result Sheets என்பதனைச் சொடுக்கவும் (Click).

04. எவரேனும் பரீட்சார்த்திக்கு தமது புள்ளிகள் தொடர்பாக மேன்முறையீடு செய்ய வேண்டியிருப்பின் நிகழ்நிலையில் மேன்முறையீட்டைச் சமர்ப்பிப்பதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விசாரணை**

| | |
|---|---|
| நேரடி தொலைபேசி எண் | - 1911 |
| பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை | - 0112784208/ 0112784537<br>0112786616/ 0112785922 |

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்